உ
சிவமயம்

REGISTERED AS AI NEWS PAPER IN CEYLON
RP. M. G. No. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத் ருசு] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞூ பங்குனி மீ ந உ (1948 மார்ச்சு 16 செவ்வாய்க்கிழமை) [இல குசு

## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஒத்தூர் உருத்திரகோடி மறைக்காட் டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர் வீரட்டம் மாதானங் கேதாரத்தும்
வெஞ்சமாக்கூடல் மீயச்சூர் வைகா வேதீச்சுரம் விவீச்சுரம் வெற்றியூருங்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையுங் கயிலாய நாதனையே காணலாமே.
— அப்பர்

திருச்சிற்றம்பலம்

## பரமஹம்சர் காட்டிய வழி

( க. நவரத்தினம் )

(முற்றொடர்)

எல்லாச் சமயத்தவர்களும், தத்தம் சமயநெறி மூலம் இறைவனை அடையலாம் என்னும் பரந்த நோக்கும், ஆழ்ந்த உண்மையும் உலகில் வலுப்பெறுநிலைத்தற்கு மூலகாரணராக இருந்த சர்வசமய சமரசஞான ஆசாரியர் ஸ்ரீ இராமகிருஷ்ணர் என்பதுவே அறிவுலகத்தின் துணிபாகும். இத்தகைய ஞான சூரியனை, உலககுருவை, பிறசமயங்கள் மாழ வேண்டும், எங்கள் சமயங்களே வாழவேண்டும் என்று அல்லும் பகலும் இறைவனை நோக்கிக் கண்ணீர் வடித்த சமயக்கணக்கர் மலிந்த 19-ம் நூற்றாண்டில், உலகிற்கு அளித்த பாரதமணித் திருநாட்டின் பாக்கியமே பாக்கியம்; இப்பெரியாரின் தோற்றமே பாரதநாட்டின் புனருத்தாரணத்திற்கும் மூலகாரணமாகும்.

இந்துசமயத்தின ஞான அநுபவங்களெல்லாம் ஒருங்குதிரண்டு வடிவெடுத்த சொரூபமே ஸ்ரீ இராமக்கிருஷ்ணர். ஸ்ரீ இராமக்கிருஷ்ணரே இந்துசமயம்; இந்துசமயமே ஸ்ரீ இராமகிருஷ்ணர்: வைணவ ஆழ்வார்களது பக்திப்பிரேமையும், சைவ நாயனமாரது ஞானச்சிறப்பும்; சாக்தர்களது வைராக்கியத்திடமும் அவரிடத்தே ஒருமித்து விளங்கின. கர்மத்தின் தூய்மைக்கும், பக்தியின் பாவசத்திற்கும், யோகத்தின் தெளிவிற்கும், ஞானத்தின் ஆதீதத்திற்கும் அவர் என்றும் அழியா எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். மேலைத்தேச அறிஞராகிய Romain Rolland ஒரு இடத்தில் பின்வருமாறு கூறுகின்றார்:

"This 'greater India', this new India—is impregnated with the soul of Ramakrishna. The twin start of the Paramahamsa, and the hero (Vivekananda) who translates his thought into action, dominates and guides her present destinies Its warm radiance is the leaven working within the soil of India and fertilizing it."

"பரந்த இந்தியாவின், புதிய இந்தியாவின் உயிரே ஸ்ரீ இராமகிருஷ்ணர். பரமஹம்சரதும், அவரது சீடரதும் சீரிய முயற்சிகளே இந்தியாவின் எதிர்காலத்திற்கு வழிகாட்டி நிற்கின்றன. அவர்களின் ஒளிப்பிரபையே இந்திய வாழ்விற்கு அடிப்படைச் சக்தியாக அமைந்திருக்கின்றது."

## மகாத்மாவின் மாசிக குருபூசை

வதிரி பூவற்கரை விநாயகராலயத்தில் கொண்டாடப்பட்டது

அகிலகுரு மூர்த்தியாய் விளங்கிய காந்திமஹான் சென்ற தைமாதம் 17ந் திகதி வெள்ளிக்கிழமை மறைந்தார். அன்று பஞ்சமித்திதியும் உத்தர நட்சத்திரமும் கூடிய நாளாயிருந்தது அவர்களதுதேகம் அஸ்திரூலமாய் அகில உலகமும் வியாபித்தகாரணத்தால் சாமானிய மனிதர்போலின்றிக் குருமூர்த்தி யென்ற பெருமையால் திதியை நீக்கி இந்த மாசிமாதம் 15ந் திகதி (27-2-48, வெள்ளிக்கிழமை உத்தரநட்சத்திரத்தில் மஹாத்மாவின் முதல் குருபூசை (மாசிகப்போல) காந்திய அபிமானிகளால் மேற்படி ஆலயத்தில் கொண்டாடப்பட்டது.

விசேஷ அபிஷேகம் விநாயகபூசை தமிழ்வேதம் ராமகீத பாவனை (ரகுபதி ராகவ ராஜாராம்) முதலியன வதிரி தேவரையாளிச் சைவவித்தியாலய ஆசிரியர் திரு ஆ. ம. செல்வத்துரையவர்களாலும் ஏனையோராலும் பிரார்த்தனையாகப் பாராயணம் பண்ணப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கிடையே குரு

## சிவராத்திரி

### வேலணையில் நிகழ்ச்சி

நிகழும் சர்வசித்து ஞூ மாசி 26ந் திகதி (9-3-48) செவ்வாய்க்கிழமை சிவராத்திரித்தினத்தன்று மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை வேலணைப் பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலில் திரு சி. சிற்றம்பலம் அவர்கள் உபயமாக விசேட அபிஷேகமும் பூசையும் நடைபெற்றன. அதன்மேல் மேற்படி கோவிலுக்கு ஈசான திசையில் புதிதாக அமைக்கப்பெற்ற நால்வர் மடாலயத்தில் சிவஸ்ரீ மு. வைரவநாதக்குருக்கள் அவர்கள் தலைமையில் ஓர் சைவஉபந்நியாசக் கூட்டம் ஆரம்பமாயது. மடாலய வரவு செலவுக கணக்குப் படிக்கப்பட்டது தலைவரவர்கள் மடாலயத்தின் நோக்கத்தைப் பற்றியும்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

பத்தி அபிமானங்கொண்ட பெண்களால் மிக ஆர்வத்துடன் உபகரிக்கப்பட்ட கடலை பயறு முதலிய சிற்றுண்டிகளும் பிரசாதமாக அங்கு நின்றோரனைவருக்கும் வழங்கப்பட்டது.

சூழ்கலையகமுந் துயர் தீர்கவே

## திருக்கஞ்சனூர்த் தலம்

### அரதத்தாசாரியரின் அற்புத வரலாறு

காவிரி வடகரைத் தலங்கள் அறுபத்து மூன்றனுள் 36-வது தலமாகவிளங்கும் சிறப்புற்றது. கஞ்சனூர் என்னும் திருத்தலம்; நரசிங்கன் பேட்டைப் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே ஒரு மைல் தூரத்தில் இத்தலம் உள்ளது. இறைவன் அக்னீசுவரர். தலப்பதிக முதற் பாடலில் "அனலோன் போற்றுங் காவலனை" என்ற குறிப்பும் இதனைத் தெளிவுபடுத்தும். இறைவி கற்பக நாயகி. நடராஜர்திருவுருவம் அம்மையாருடன் சிலாமூர்த்தமாக இருக்கின்றது. பிரமதேவனும் இங்குப் பூசித்து வேண்டியன பெற்றுள்ளான். சிவபரத்துவம் சொல்லிச் சைவ ஸ்தாபனம் செய்த அரதத்தாசாரியர் அவதார ஸ்தலம் இதுவே. திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த திருத்தாண்டகப் பதிகம் ஒன்றுமட்டும் இத்தலத்திற்கு உரியதாகக் காணப்படுகின்றது.

### அரதத்தாசாரியர் வரலாறு

இவர் வாசுதேவாசாரியார்க்குப் புதல்வராய்ப் பிறந்தார். இவரது பிள்ளைத் திருநாமம் சுதரிசனாசாரியர் என்பது. மனைவி பெயர் கமலவல்லியார். புதல்வர் எண்மர், புதல்வியர் இருவர். தந்தை வைணவராய் இருப்பினும் இவர் சிவபக்தியில் மேலிட்டு விளங்கினார். இதனால் தாய்தந்தையரது தண்டனைக்கு உள்ளானார். பின் ஸ்ரீ அக்னீசுவரர் ஆலயத்தை அடைந்து பெருமானால் சிவமந்திரம் உபதேசிக்கப்பெற்று, அரதத்தாசாரியர் என்ற திருநாமமும் வழங்கப்பெற்றார். சிவ மகிமையைக் கூறிய தம்மோடு வாதஞ்செய்த வைணவர்கள் தெளியுமாறு வரதராஜப் பெருமாள் ஆலயத்திற் பலரும் காண, பழுக்கக் காய்ச்சிய இருப்பு முக்காலிமீதிருந்து யாதொரு இடுக்கணுமின்றிச் சிவபரத்துவஞ் சாதித்தனர். அப்பொழுதருளியதே 'சுருதி சூக்திமாலை" எனும் ஆரிய வடமொழி நூல் இது தமிழில் "சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்" என்னும் பெயரால் வழங்கப்படும்.

கோஹத்தி பற்றிய ஒருவனுக்கு அது நீங்குமாறு இவர் அருளிச்செய்ததைச் சிலர் பரிகசிக்க, அதனை மெய்ப்பிக்கவேண்டி ஆலயத்திலுள்ள நந்திக்கு அறுகம்புல்லைக்கொடுத்து உண்ணச் செய்தவர். சிவலிங்க பூபதியால் கொடுக்கப்பட்ட பட்டாடையை அக்கினியில் ஆகுதிசெய்து பின்னர் அதை அக்கினீசுவரர் திருமேனியில் இருக்கக் காட்டியவர். தமது வீட்டுக்குள் நுழைந்து அரிசியைத் தின்ற நாயை மனைவியார் வெட்டி வீழ்த்த இறந்த அதற்கு நீறுபூசி உருத்திராக்கமணிவித்து, தெய்வவடிவு பெறச்செய்து வானுலகிற்கு அனுப்பினர். காவிரியிலுள்ள மணலெல்லாம் சிவலிங்கமென்று சொல்லிய ஒரு புலையனது சிவபக்தியைக் கண்டு சிவஞானி எனக் கருதி அவனை வணங்கி அவனது பாதரேணுவைத் தமது தலையில் வைத்துக்கொண்டு ஆநந்தக்கூத்தாடினார். மடப்பள்ளியிற்புகுந்து அன்னத்தையுண்ட நாயைப் பார்த்தும், "சிவனே இவ்வுருவில் வந்து உண்டார்" என்று கருதிப் பலருடனிருந்து அவ்வுணவை உண்டார்.

ஒருநாள் நீராடச் செல்லும்போது பசியோடு வந்த ஒருமுதுபுலையனுக்கு அவன் விருப்பப்படி பிண்ணாக்கும் கஞ்சியும் கொடுத்து உண்ணச்செய்தார். மறுநாள் சோழ அரசனது கனவிற் பெருமான் சிவனடியார் திருக்கோலத்துடன் எழுந்தருளி "நீ கொடுத்த நிவேதனம் அரதத்தன் நேற்று அளித்த பிண்ணாக்குக்கும் கஞ்சிக்கும் ஒப்பாகாது" என்று சொல்ல, அரசன் இவரது வீட்டிற்கு வந்து வணங்கி, அடிமையாயினன்.

மனித உடலோடு கயிலை செல்ல விரும்பிய சோழ அரசன், இவர் ஆணைப்படியே அக்னீச்சரத்திற்கு அருகிலுள்ள ஏழுசிவாலயங்களையும் குதிரைமீதேறிக் கொண்டு பின்னொருவன் குடைபிடிக்க வலம் வந்தபோது குதிரையும் குடைபிடித்த ஆளும் முடிவிற் சிவலோகஞ் செல்லவே, கண்ட அரசன் மறுபடியும் அரதத்தரிடம் சென்று நடந்தது கூற, அவராணைப்படியே பின்னர்மடந்தே ஏழு ஆலயத்தையும் வலம்வந்து ஆகாயத்திலிருந்து தமபொருட்டு வந்த விமானத்தில் மனித உடலோடு கயிலையடைந்தான்,

தமது சகோதரியின்புதல்வர் மணிகர்ணிகா ஸ்நானத்தை விரும்ப, அவரை அக்னி தீர்த்தத்தில் மூழ்குவித்துக் காசியில் தோன்றச் செய்தார். அரசன் வீட்டிற் களவு செய்த ஒருவன், நடந்து இவரிடம் ஓடிவந்து அடைக்கலம்புக, அவனுக்குநீறளித்து தமதுஇல்லத்தில் உணவளித்து, தேடி வந்த காவலாளர்க்கு இவன்தமதுபுதல்வன் என்று சொல்லிக் காத்தவர். இவ்வாறு பற்பல அற்புதங்களை நிகழ்த்தி வந்த அரதத்தர் முத்தியையடையுங் காலத்துத் தம்முடனிருந்தபதினொருவர்க்கும், பலி அன்னம் உண்டு வளர்ந்த தமது நாய்க்கும் ஒருசேர முத்தியளித்துத் தாம் முத்தியடைந்தனர்.

இவரியற்றியதாகவுள்ள "பஞ்சரத்னமாலிகா" என்ற பெயரினை யுடைய ஐந்து வடமொழிச் சுலோகங்கள் சிவபெருமானே முழுமுதற் கடவுளென்பதைப் பல காரணங்களோடு நிரூபிக்கின்றன. சிவஞான சுவாமிகள் இவ்வைந்தனையும் தமிழில்மொழிபெயர்த்துள்ளார். இது கீழே தரப்படுகிறது.

உயர்காயத்திரிக் குரிப்பொருளாகலின்
தசாதன் மதலை தாபித் தேத்தலின்
கணணன் கயிலையி னண்ணிநின் றிரப்பப்
புகழ்ச்சிறி னமைந்த மகப்பே றுதவலின்
தனது விழியுடன் ஓராயிர கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலின்
ஆங்கவற் கிரங்கி யாழியீந் தருடலின்
ஐங்கணை கிழவனை யழல்விருந் தாக்கலின்
அமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடு [தலின்
தென்றிசைத் தலைவனைச் செருத்துயிர் [பருகலின்
அவுணர் முப்புர மழியவில் வாங்கலின்
தக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலின்
தனஞ்சயன் றனக்குத் தன்படை வழ

தொடர்ச்சி 6 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஹு
பங்குனிமீ ௩ ௨ செவ்வாய்க்கிழமை

## இப்பத்திரிகை

இப்பத்திரிகையின் 59 ம் புத்தகம் நிகழும் மார்ச் மாதம் 30ந் திகதி செவ்வாய்க்கிழமையோடு பூர்த்தியாக, அடுத்ததாகிய 60 ம் புத்தகம் வருகிற ஏப்பிரல்மாசம் 2 ந் திகதி வெள்ளிக்கிழமைப் பிரசுரத்துடன் ஆரம்பமாகின்றது.

இப்பத்திரிகைப் பிரசுரங்கள் இற்றைக்கு 59 வருடங்கட்கு முன், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் முயற்சியினாலே தோன்றிச் சைவ மக்களின்பொருட்டுச் சிறப்பாகவும், தமிழ் மக்களின் பொருட்டுப் பொதுவிற் சிறப்பாகவும், இவ்விலங்கையிலும் அயல்நாடுகளிலுமுள்ள ஏனையமக்கள் பொருட்டுப் பொதுவாகவும் உழைத்து வருகின்றதெனலாம். சைவ சமயம், தமிழ்மொழி, விவசாயம், கைத்தொழில், வியாபாரம், அரசியல், சுவாதீனம், நல்ல முறையிற் சனசமூக ஈடேற்றமென்னு மிவற்றின் பொருட்டு இயன்றவரையில் நன்குஉழைத்தல்வேண்டு மென்பதே இப்பத்திரிகையின் நோக்கமாகும்; ஆனால் இந்நோக்கங்களை யுத்தேசித்து உழைப்பதில் இப்பத்திரிகை எவ்வளவிற்கு அநுகூலமுற்று வருகிறதென்பதை அபிமானிகளே சொல்லவேண்டும். ஆனாலும், மேலேசொல்லப்பட்ட இவை விஷயமாக இயன்றவரையில் உழைத்தல்வேண்டு மென்பதுதான் இப்பத்திரிகைப் பிரசுரங்களை நடத்தும் அதிகாரிகள் அன்று தொடக்கம் இன்றுவரை கொண்ட வேணவாவாகும்.

சென்ற 59 ஆண்டுள் இந்த யாழ்ப்பாணத்திறறுனே, தமிழிலும் ஆங்கிலத்திலும் பல பத்திரிகைகள், மாரிக்காலத்தில் அங்குரிக்கும் ஆம்பி போலத் தோன்றி அற்ப காலத்துள் மறைந்து போனமையை அபிமானிகள் பலர் அறிவர்; இப்பத்திரிகை அவ்வாறான இடையூறின்றி இன்றும் நின்று நிலவுவதற்குக் காரணம் ஆண்டவனருளும், பத்திரிகை அபிமானிகளின் ஆதரவுமேயென்பது நமது நம்பிக்கை.

இப் பத்திரிகைக்கு அறுபதாம் வயசு தொடங்கும்போதாயினும், இதனைக் காலத்திற்கேற்ப விருத்தி செய்யவேண்டுமென்பது இப்பத்திரிகையை நடாத்தும் அதிகாரிகளின்நோக்கம்; அபிமானிகளுள்ளும் அநேகர் அப்படியே விரும்புகின்றனர். காகிதம், அச்சிடுதற்காகிய எழுத்து முதலாம் உபகரணங்கள், யந்திரங்கள், தொழிலாளர் வேதனம் முதலிய இவைகளெல்லாம் விலையாலும் கூலியாலும் அதிகப்பட்டிருக்கிற இந்த நேரத்திற் பத்திரிகையைப் பெருப்பித்தல் புத்தியாகுமோவெனச் சந்தேகங்கொண்டு அன்பர்கள் அஞ்சுதலுங்கூடும்; ஆனால், "தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதுண்டோ" என்றாங்கு, நல்ல கருமத்தைத் தூய சிந்தனையோடு இறைவனருளை முன்னிட்டுக்கொண்டு தொடங்கும்போது, எவ்வகையான இடையூறும் நேராவண்ணங் காத்தருளுவான் அந்த இறைவன் என்பதே எமது கொள்கை.

இவையெல்லாவற்றையும் உத்தேசித்துஇப்பத்திரிகையின் ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் இரண்டினையும் வருகிற ஏப்பிரல்மாசம் 2-ந் தேதி தொடக்கம் (அதாவது இதன் 60-ம் புத்தகம் ஆரம்பிக்கும்போது) கொழும்பில் வெளிவருந்தினசரிகளாகிய வீரகேசரி தினகரன் முதலிய பத்திரிகைகளின் (டபிள்டெமி) பிரமாணத்தில் நான்கு பக்கங்கள் கொண்டனவாய் வெளியிடுதற்கு அதிகாரிகள் உத்திதேசித்திருக்கிறார்கள்; இந்த உத்தேசம் இப்பத்திரிகையின் அபிமானிகட்கும்மகிழ்ச்சியைத்தரும். மேலும் பத்திரக்கிரயத்தை இப்போது உள்ளபடியன்றி மேலதிகமாக விதிக்கும் நோக்கமு மில்லையாம்.

இங்ஙனமாக, இப்பொழுது இப் பத்திரிகாபிமானிகளிடம் யாம் கேட்டுக்கொள்வதொன்றுண்டு; சைவமக்கள் தமிழ் மக்களாகிய உங்களால் அபிமானித்து ஆதரவு பெற்றுவரும் இப்பத்திரிகைப் பிரசுரங்கள், பெரிய பிரமாணத்தில் இனிது நடைபெறும் வண்ணம், உங்களுள் எவரிடத்தேனும், பத்திரக்கிரயம் பாக்கியாகவிருந்தால், அதனை உடனே அனுப்பிவைப்பதோடு,உங்கள்சுற்றமித்திரருள் ஆளுக்கொருவரையேனும் இப்பத்திரிகைப் பிரசுரங்களை ஆதரிக்கும்படி தூண்டும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறேம்.

---

## வருமானவரிக்கான தொகை

### அதிகரிக்க வேண்டுகோள்

இப்போது மாதம் 200 ரூபா வருமானமுடைய எவரும் வருமானவரி கொடுக்கவேண்டும் இதனால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் அரசாங்கத்தில் வேதனம் பெறும் உத்தியோகத்தரேயாவர்.

வருமானவரிமுறையால் தாம் அதிகம் கஷ்டப்படுகிறதாகவும், வருமானவரிக்கான தொகையை 200 ரூபாவில் இருந்து 600 ரூபா ஆக்கவேண்டுமென்றும் அரசாங்க உத்தியோகத்தர் கோருகின்றனர்.

இலங்கையில் உள்ளவர்களில் 100-க்கு 78 விகிதமானோர் மாத வருமானம் 25 ரூபாவும் அதற்குக் குறைவுமாகும் $21\frac{1}{2}$ விகிதமானவர்கள் 25 ரூபா தொடக்கம் 200 ரூபா வரை வருமானம் பெறுகின்றனர், $\frac{1}{2}$ விகிதமானோர்தான் 200 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுகின்றனர். இந்த விபரத்தை "டைம்ஸ்" பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

## மதுரைத் தமிழ்ச்சங்கப் பரீட்சை

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டித பரீக்ஷை, பாலபண்டித பரீக்ஷை, பிரவேசபண்டிதபரீக்ஷை என்ற மூன்றும் 1948-ம் ஆண்டு ஏப்ரல் மாசம் 5-ம் 6-ம் 7-ம் தேதிகளில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை – நாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் வித்துவான் ந. சுப்பையபிள்ளை யவர்களின் மேற்பார்வையில் நடைபெறுமென அறிகிறோம்.

---

## மூன்றுமாச நல்நடத்தைப் பிணை

விடத்தற்பழை வாசியான வல்லிபுரம் மயில்வாகனம் என்பவர், அவ்வூர் நாகநாதி கந்தையாவினுடைய வீட்டையும், வைக்கோல் போரையும் எரிக்கும் நோக்கமாக, கந்தையாவின் வேலியில் தீ வைத்தாராம். பின்னர் சாவகச்சேரிபொலீசார் சாவகச்சேரிப் பொலிஸ்நீதிபதி முன்னிலையில் குற்றஞ்சாட்டினர். விசாரணை முடிவில் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு 250 ரூபாவுக்கு 3 வருடநன்னடத்தைப்பிணையும், முடிக்குரிய செலவு 50 ரூபா செலுத்தவும்தீர்ப்பளித்தார்.

---

## ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் குருபூசை விழா

மேற்படி விழா நாவலப்பிட்டி இந்துவாலிபசங்க ஆதரவின்கீழ் கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் 13-3-48 சனிக்கிழமை பி. ப. 6 மணியளவில் நடைபெற்றது. அத்தருணம் திரு. பு. ஞானப்பிரகாசம் B. A., B. SC., அவர்கள் "ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும் மகாத்மாகாந்தியடிகளும்" என்னும் விஷயம்பற்றி இனியதோர்சொற்பொழிவு ஆற்றினார்கள். பிரார்த்தனை பூசை என்பவற்றுடன் விழா இனிதே நிறைவேறிற்று. —நிருபர்

---

## இன்னோர் மந்திரி பதவியிழந்தார்

### ஆனால் தேர்தலில் முற்படலாம்

கம்பளைப் பிரதிநிதியாய்ப் பாராளுமன்றத்தில் இருந்து ஓர் மந்திரியாய் பதவிவகித்தவரான திரு. ஆர். எஸ. எஸ். குணவர்த்தனவின் தெரிவை ஆட்சேபித்து ஓர் தேர்தல்மனு சமர்ப்பிக்கப்பட்டது. இம்மனு நீதியரசர் திரு வின்ட்ஹாமினால் விசாரணை செய்யப்பட்டது.

இந்திய வாக்காளர் பலரைப் பயமுறுத்தி எதிராக நின்ற அபேட்சகருக்கு வாக்கு அளிக்காமற் செய்யப்பட்டது என்ற ஓர் குற்றமும் திரு குணவர்த்தனவிற் கெதிராகச் சுமத்தப்பட்டது. திரு. குணவர்த்தன அக்குற்றச்சாட்டை ஆட்சேபனை செய்யவில்லை.

விசாரணையின் பின்னர் நீதியரசர் திரு வின்ட்ஹாம், வாக்காளரைப் பயமுறுத்தி அவர்களை வாக்குச் செலுத்தாமல் செய்துவிட்ட குற்றத்தை திரு. குணவர்த்தன ஒப்புக்கொண்டமையினால், அவருடைய தேர்தல் செல்லுபடியாகமாட்டாது என்று தீர்ப்பளித்தார்.

திரு. குணவர்த்தன ஐக்கியதேசியக்கட்சிச் சார்பில், கண்டித் தொகுதியில் ஓர் அபேட்சகராக முன்வருவர் என்று சொல்லப்படுகிறது.

## செய்திக்கோட்டு

சென்றவாரம் கங்காநதியிலே 100 பேரை ஏற்றிச்சென்ற ஓர் படகு கவிழ்ந்ததால், அதில் இருந்த 75 பேர் ஆண்கள் பெண்கள் பாலர் உட்பட தண்ணீரில் அமிழ்ந்தி இறந்தனர்.

0 0 0

சென்னை மாகாணத் தமிழ் எழுத்தாளர்களின் மூன்றாவது மகாநாடு 1948ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 வது வாரம் நாகர்கோவிலில் நடைபெறும். வரவேற்புச்சபைத் தலைவர் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையாவர்.

0 0 0

நாவாந்துறை வாசியான சீமாம்பிள்ளை என்பவரை, பராமுகமாகக் காரைச்செலுத்தி மரணம் விளைத்ததன் பொருட்டு கனகசுந்தரம் என்னும் கார்ச்சாரதி, யாழ்ப்பாணம் நீதிபதியால் 5 மாதக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

0 0 0

ஐக்கியதேச ஸ்தாபனத்தின் பொருளாதார கலாச்சார உபசபையின் அடுத்தகூட்டத்திற் பங்குபற்றுமாறு இலங்கைக்கும் அழைப்பு வந்திருக்கிறது

0 0 0

நீர்கொழும்பு நகரத்தில் முனிசிப்பல் சங்க நிருவாகம் அமைக்க அரசாங்கம் திட்டம் வகுத்திருக்கிறது.

0 0 0

கொழும்பு நகரசபையின், சமசமாஜக் கட்சி அங்கத்தவராயிருக்கும் ஜனாப் எம். எஸ். அபுபக்கர் சென்ற ஆண்டு மே மாதம் நிகழ்ந்த ஓர் வேலைநிறுத்தத்தில் சட்டவிரோதமாக நடந்தார் என்ற குற்றத்தின்பேரில் மூன்று மாதச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

0 0 0

கொழும்புப்புகைரதப்பகுதியார்க்குரிய "தட்டெட்"டில் இருந்து 25,000 ரூபா பெறுமதியான இந்தியப் புடவைகள் களவுபோய்விட்டன.

* *

தென்பகுதியைச் சேர்ந்த நடியகம் என்னும இடத்திலே திரு. தெரன்ஸ்பீரிஸ் என்னும் ஐக்கியசங்க உத்தியோகத்தர் வேட்டையாடி நிற்கையில், அவருடைய கூட்டாளி ஒருவரால் காத்திராப்பிரகாரம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

0 0 0

கண்டித்தொகுதிக்கான தேர்தல் நியமனத்தினம் ஏப்ரில்மாதம் 3ம் திகதி என நியமிக்கப்பட்டிருக்கிறது.

0 0 0

களனித்தேர்தல் சம்பந்தமான தீர்ப்பு வருகிற வெள்ளிக்கிழமை நீதியரசர் திரு வின்ட்ஹாமினால் அறிவிக்கப்படும்.

---

## குருதேவரின் அமுத மொழிகள்

1 உலகப்பற்றை உடனே போக்கு இறைவன் பற்றை இன்றே ஆக்கு.
2 எண்ணத்தில் கள்ளம் இல்லாதானே ஏகன் கடவுள் வீடடைவானே.
3 யாவன் இறைவனைத் தேடுகிறானோ அவனை இறைவன் நாடுகிறானே.
4 அன்பால் அறிவால் இறைவனைத்தேடு அன்பாய் எளிதாய் அவனையே நாடு.
5 ஆசையா நீரே பொருளைக் காட்டும் அலையா மனமே ஈசனை நாட்டும்.
6 பலதுறையிறங்கினும் ஒன்றாம் நதியே பலமதம்பேசினும் ஒன்றாம் கதியே.
7 இல்லறம் நடத்தி இனிதே கடமைசெய் நல்லறப்படுத்தி நாதனை யுடைமை[செய்
8 பல பல கற்பினும் ஒன்றேமுடிபு சில சில கற்பினும் ஒன்றேதுணிபு.
9 பக்தர்க்கில்லை பசியும் தாகமும் முக்தர்க்கில்லை மோகமும் மடமையும்.
10 எல்லார் உளமும் ஈசனுக்காயினும் நல்லார் மனமே நனிவீடாகும்.

—கண்ணன் அடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி அலங்கோலம்

## அரசாங்கத்தின் பராமுகம்

### டக்டர்மாருக்கு அதிகவேலை

(நமது நிருபர் எழுதுகிறார்)

சென்றவாரத்திறுதியில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைப் பார்வையிட்டேன். தமிழ் மக்களுக்குப் பிரதான நகராயுள்ள இந்த யாழ்ப்பாணத்திலே, இலங்கையின் மிகப் பிரதான பட்டினங்களில் ஒன்றாகிய இந்த யாழ்ப்பாணத்திலேயுள்ள பிரதம ஆஸ்பத்திரி நிர்வகிக்கப்படும் முறை அரசாங்கத்துக்கு மதிப்பையும் கண்ணியத்தையும் கொடுப்பதாயில்லை.

நோயாளிகள் முதலில் வந்து தம் நோயைச் சொல்லிக்காட்டி, மருந்து பெறும் ஸ்தலத்துக்குச் சென்ற திங்கட்கிழமை நான் போனேன் ஒரே சனக்கூட்டம். அவர்கள் எல்லோரும் நோயாளிகள்தான், இவர்களிற பலவிதமான நோயாளிகள் இருந்தனர். இவர்களை எல்லாம் பார்த்து, பரீட்சித்து ஆகவேண்டியன செய்தற்கு ஒரேஒரு டக்டர்தான் இருந்தார். அதுவும் முன்னர் டக்டராகவிருந்து இளைப்பாறி பென்ஷன் பெறற ஒருவரை முதியவயதினரை மீண்டும் டக்டராக அரசாங்கம் நியமித்து இங்கே, இவ்வளவு ஜனங்களையும் கவனிக்க ஏற்பாடு செய்திருக்கிறது. மனுஷன், நல்லவர்தான் ஆனல், இவ்வளவு பெருந்தொகையினரையும் இவர் பார்த்து நோய்க்குத் தக்கவாறு பரிகரிக்க முடியுமோ என்பது எல்லோர்க்கும் ஆசங்கையாக இருக்கிறது இவர்க்கு உதவியாக ஓர் "அப்போதிக்கரி" தானும் இல்லை. பல ஆஸபத்திரிகளில், அப்போதிக்கரிமாரே திறமையுடன் நோயாளிகளைப் பராமரித்து வருவதை யான் அறிவேன். ஆனல், இந்த ஆஸ்பத்திரியிலே, வைத்தியப்பயிற்சி பெற்றுள்ள "அப்போதிக்கரி" உத்தியோகத்தரைக் கேவலம் "கிளார்க்" வேலைக் கமர்த்தியிருக்கிறார்கள். மற்றும் இடங்களில் வரும் நோயாளிகளுக்குத் துண்டு எழுதிக் கொடுப்பது கிளார்க்மாரின் வேலை. ஆனல் இங்கே அத்தகைய கிளார்க்கில்லை கிளார்க்கிலும் பார்க்கக் கூடிய பயிற்சி பெற்று சம்பளமும் அதிகம் பெறுபவரை கேவலம் கிளார்க்வேலை பார்க்கும்படி அரசாங்கம் விட்டிருக்கிறது.

மற்றும் ஆஸ்பத்திரிகளிலே, இங்கிலாந்துசென்று எப் ஆர் ஸி எஸ் போன்ற வைத்தியப் பரீட்சையில் தேறியவர்களே அநேகமாகச் சத்திர வைத்தியத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனல் இந்த யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில இலங்கை எல் எம் எஸ் பட்டத்தை மாத்திரம் பெற்ற ஒருவர் இத்துறையில் இருப்பது குறிப்பிடத்தக்க ஓர் விஷயம்.

சென்ற தைமாதத்திலே, ஷை ஆஸ்பத்திரியில் இருந்து சிகிச்சை பெற்றவர்களின் நாளாந்தச் சராசரி ஏறக்குறைய 375. பிப்ரவரிச் சராசரி 350. ஆனல இவ்வளவு பேரையும் பார்த்து, அவர்களின் நோயை அவதானித்து மருந்து எழுதுவதற்கு ஆக நாலேநாலு டக்டர்மார்தான் உளர் அவர்களில் ஒருவர் துர்நடத்தையால் ஏற்படும் வியாதிக்காரரைக் கவனிப்பர். மீதி மூவருந்தான் இவ்வளவு பேரையும் பார்க்கவேண்டியவர்கள்.

ஒரு. நோயாளியிடம்போய், அவனையோ அவளையோ பார்த்து, வியாதியைக் கேட்டு, அதில் உள்ள மாற்றத்தை ஆராய்ந்து, அதற்கான மருந்து எழுத, உணவு எழுத ஒரு டக்டருக்குக் குறைந்தபட்சம் 10 நிமிஷம் செலவாகும். அப்படியானல் 370 நோயாளிகளையும் பார்த்து ஏற்றன செய்யக் குறைந்தபட்சம் 3700 நிமிஷங்கள் அல்லது ஏறக்குறைய 60 மணித்தியாலங்கள் செலவாகும் இந்த 60 மணித்தியாலங்களையும் மூன்று டக்டர்மாருக்கிடையே பிரித்தால ஒருவர்க்கு 20 மணி நேரம் வேண்டும். அதாவது ஒரு டக்டர் ஒருநாளைக்கு குறைந்தபட்சம் 20 மணி நேரமாவது செலவிடவேண்டும். இதனைவிட, அவர்க்கு ஆவாது உத்தியோக சம்பந்தமான வேறு கடமைகளும் உண்டு, ஆகவே ஒரு டக்டர் மனப்பூர்வமாக, ஆண்டவனுக்குக் கணக்குக் கொடுக்கத்தக்கதாகக் கடமையாற்றுவாரேயானல், அவருக்கு நித்திரை கிடைக்காது, உண்ண நேரம் கிடைக்காது, மலசல விமோசனத்துக்குத்தானும் சாவகாசம் கிடைக்காது எமது ஆஸ்பத்திரியில் உள்ள டக்டர்மார் அப்படியெல்லாம் நித்திரையின்றி மலசல உபாதையின்றி, ஸ்நானம் இன்றி, ஊண் இன்றித்தான் இருக்கின்றனரா? ஆகவே அவர்கள் ஓர் நோயாளி விஷயத்தில் 10 நிமிஷந்தானும் செலவழிக்கவில்லை என்பது தெள்ளிதிற் புலனாகின்றது. ஓர் டக்டர் நோயாளி ஒருவன் விஷயத்தில் தினந்தோறும் 10 நிமிஷமாவது செலவழிக்காவிட்டால், அந்நோயாளிக்கு இந்த ஆஸ்பத்திரியால் என்னபயன்? யாழ்ப்பாணத்திலும் ஆஸ்பத்திரி வைத்திருக்கிறோம் என்று சொல்வதற்குத்தான் இந்த விகடநாடகமா?

இன்னேர் விஷயம் தினந்தோறும் ஆஸ்பத்திரியில் இருந்து சிகிச்சைபெறும் நோயாளிகளின் சராசரித்தொகை 370 என்றேன். ஆனல் அங்கே 270 பேர் மாத்திரம் இருக்கக் கட்டில்களும் ஏனைய வசதிகளும் உண்டு. மீதி 100 பேரின் கதியும் என்ன? அக்கதி என்னவென்பதை என் கண்ணாரக்கண்டேன். எத்தனையோ நோயாளிகள் வெறும் சீமந்துத் தரையிற் கிடந்தனர் ஓர் பக்கத்திலே, கக்கூசிற்குச் சமீபமாக உள்ள சாலையில் 20-க்கு மேற்பட்ட நோயாளிகள் சீமந்துத் தரையிற் கிடந்தனர். நாள்முழுவதும், கக்கூசில் இருந்துவரும் கந்தத்தை இவர்கள் சுவாசிக்கவேண்டுமென்பது அதிகாரிகள் விருப்பம்போலும்! இந்தக் கேவலமான நிலைமையில், இந்த நோயாளிகளின் நோய் சுகமாவது எப்போது? ஊரவர்களுக்குச் சுகாதாரம் படிப்பிக்கும் அரசாங்கம, தனது விஷயத்தில் இவ்வளவு அலங்கோலமாக நடாத்தல் முறையா?

இனி, மற்றும் ஆஸ்பத்திரிகளில் ஒவ்வோர்வித நோய் உற்றிருப்பவரை, வேறுவேறாக வைத்திருத்தல் வழக்கம் ஆனல் இந்த யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சர்வ சமரசம்தான். நெருப்புக்காய்ச்சற்காரன், வயிற்றுளைவுக்காரன், இருமற்காரன், சொறிங்குக்காரன், வயிற்றுக்கழிச்சற்காரன் எல்லாரும் ஓரிடத்திலேயே வைக்கப்பட்டிருந்ததையும் கண்டேன்.

ஆரோடு நோவோம், ஆர்க்கெடுத்துரைப்போம், ஆளும்நீர் அருளுவீரானல் என்று நோயாளிகள் ஆற்றுகின்றனர். ஆனல் இவர்களின் ஆற்றல் அதிகாரிகள் காதுக்கு இன்னும் எட்டவில்லை.

ஆஸ்பத்திரியில் பிரதான மருந்துவகைகளும், ரண வைத்தியத்துக்கு இன்றியமையாத வஸ்லின் செய்யும் நல்லை என்றும் அறிகிறேன.

---

## அனுதாபக் கூட்டம்

சடந்த 6-3.48 சனிக்கிழமை இரவு 8 மணியளவில், கோப்பாய் சூரியோதய வாலிபர்சங்க வாசகசாலை மண்டபத்தில் மேற்படி சங்க உபதலைவர் திரு. எம் என் பூலோகம் அவர்களின் தலைமையின்கீழ் கூட்டம் ஆரம்பமாயது. தலைவர் முன்னுரையின்பின்னர் சபையோர் அனைவரும் எழுந்து மகாத்மாவின் மரணத்திற்காக அனுதாபங் காட்டினர். உபகாரியதரிசியால் சென்றகூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. பின்னர் எம். என். பொன்னம்பலம் எம். கே. செல்லையா. செல்வத்துரை என்போர் காந்தியடிகளைப்பற்றிச் சிறந்த முறையிற் சொற்பொழிவாற்றினர்கள். தலைவர், காந்தியகானைக் கொன்ற கொலைபாதகன் நாதுராம் விநாயக்கோட்ஷேயும், அவரது சகாக்களும் கூடியுள்ள இந்துமகாசபையின் போக்குகளை விரிவாக எடுத்துரைத்தார். [illegible] சபையோர் [illegible] யுடையுடன் கூட்டம் [illegible]

—கடித

---

## இளைஞர் தேசீய இயக்கம்

சிவராத்திரி அன்று (9-3-48) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 7 மணியளவில் பணாகம் வடக்கு இளைஞர் தேசீய இயக்கத்தனரின் பொதுக்கூட்டம், பன்னூற்றுக்கணக்கான ஆண்கள் பெண்கள் மத்தியில் ஷை இயக்கத் தலைவர் திரு. ஆ. கந்தசாமி ஆசிரியர் தலைமையில் தேசீய வாசிகசாலை முன்றிலில் நடைபெற்றது. அவ்வமயம் முதலாவதாக காந்திஜீயின் மரணத்துக்கு அனுதாபமாக இரண்டு நிமிஷம் மௌனம் சாதிக்கப்பட்டது அங்கு வித்துவான் ந சிவபாதனர் உட்படப் பல பெரியோர்கள் சொற்பொழிவாற்றினர்கள்.

வித்துவான் ந. சிவபாதனர் அவர்கள் பேசும்போது உலகம்சிறப்பாக இளைஞர்களதும், தாய்மார்களதும் கையிலேயே இருக்கிறது என்பதைத் தக்க உதாரணங்களுடன் விளக்கிக் காட்டினர். தாய்மார்களே மற்றையோரையும், சிறப்பாக இளைஞர்களையும் தேசசேவையில் ஈடுபட வழிகாட்டிகள் எனவும் வற்புறுத்திக் கூறினர். இன்னும் காந்திஜீயின் மறைவைப்பற்றியும், அவருடைய கொள்கைகளாகிய அஹிம்சை, ஹரிசனசேவை, மதுவிலக்கு முதலாயவற்றை ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கவேண்டுமென்றும், அச்செய்கைகளே நாம் காந்திஜீக்குச் செய்யும் சிறந்த ஞாபகசின்னமாக விருக்கும் எனவும் விளக்கிக் காட்டினர்.

பின்னர் இவ்வியக்கம் உண்டாகி இன்றுடன் 15 மாதங்கள் எனவும், இக்கால எல்லைக்குள் இவ்வியக்கம் செய்த தொண்டுகளைப்பற்றி விரித்தோதினர். இவ்வியக்கம் அவ்வூரிலுள்ள முத்துமாரியம்மன் சந்நிதியில நடைபெற்ற பலியிடுதல் தாசியர் நடனம் போன்ற துர்ச்செய்கைகள் நடைபெறுவண்ணம் தடுத்த மாபெரும் சேவையைப்பற்றி மிகவும் மெச்சிப் பேசினர். பின்னர் சிற்றுண்டியும் தேநீரும் வழங்கப்பட்டதும் அவ்வூர்ச் சிறார்களால் கோலாட்டம் நடைபெற்றது. இடையிடையே காந்திஜீக்குப் பிரார்த்தனைப்பாடல்களும் பாடப்பட்டன அதன்பின் கோலாட்டக் கோஷ்டியினருக்குத் தலைவராற் பரிசில்கள் வழங்கப்பட்டன. கோலாட்டக் கோஷ்டி ஆசிரியர் திருவாளர் கந்தப்பு அவர்கள் இவ்வியக்கத்துக்குப் புரிந்த சேவையைப்பாராட்டித் தலைவராற் பணமுடிப்பு ஒன்று வழங்கப்பட்டது.

ஈற்றில் சபையோர் குறிப்புரையுடனும் தலைவர் குறிப்புரையுடனும் கூட்டம் இனிதே கலைந்தது. கடித.

---

## சேர் ஒலிவர் விலகுவாரா?

### கொறியாவுக்கு மந்திரிப்பதவி

சேர் ஒலிவர் குணதிலகாவும், இலங்கை மந்திரசபையை விட்டு விலகி, இன்னும் சிலகாலத்தில் இங்கிலாந்திலே இலங்கை அரசாங்கப் பிரதிநிதியாக (ஹைகமிஷனர்) நியமிக்கப்படுவார் என்று ஓர் செய்தி கூறுகிறது.

ஏற்கெனவே ஐக்கியதேசீயக்கட்சியைச் சேர்ந்த இரு மந்திரிமார் பதவியிழந்துவிட்டனர். ஒருவர் திரு. ஜோர்ஜ் ஈ. டீ. சில்வா, மற்றவர் திரு. ஆர். எஸ். எஸ். குணவர்த்தன அவர்களுடன் சேர் ஒலிவரும் பதவியிலிருந்து நீங்கினல் மூன்று மந்திரிகள் ஸ்தானம் காலியாய்வரும்.

இப்போது லண்டனில் இலங்கை யாசாங்கத்தின் பிரதிநிதியாயுள்ள திரு. ஜீ. ஸி. எஸ். கொறியாவை செனேற்சபையில் நியமித்து. அதன் பின் சேர் ஒலிவர் வகித்துவரும் உள்நாட்டு மந்திரிப்பதவியை வழங்கலாமோ என்றும் திரு சேனநாயக்கா ஆலோசித்து வருகிறாராம். அப்படி உள்நாட்டு மந்திரப்பதவியை திரு கொறியா விரும்பாவிட்டால், அவர் அமெரிக்காவுக்கு இலங்கையின ஹைகமிஷனராக அனுப்பப்படலாம்.

கண்டியிலும், கர்பளையிலும் நிகழவிருக்கும் உபதேர்தல்களில் இடதுசாரிக்கட்சியினர் தத்தம் அபிப்பிராயபேதங்களை மறந்து ஒற்றுமை பூண்டு ஒரே அபேட்சகரை ஆதரிக்கவேண்டும் என்று சமதர்மக் கட்சிக் காரியதரிசி திரு. பீற்றர் கெனமன், மற்றும் இடதுசாரிக்கட்சியினர்க்கு ஓர் வேண்டுகோள் சமர்ப்பித்திருக்கிறார்.

---

## ஆயுர்வேதம் வளர

### யாழ்ப்பாண வைத்தியர் ஆலோசனை

லங்கா ஆயுள்வேத வைத்தியசங்கத்தின் பொதுக்கூட்டமொன்று சென்ற மார்ச் மாதம் 10ந் உ புதன்கிழமை மேற்படி சங்க மண்டபத்தில் வைத்தியர் திரு. V. கனகசபை அவர்கள் தலைமையில் கூடியது. பெருந்தொகையான வைத்தியர்கள் கூடியிருந்தார்கள்.

பல அரிய வைத்திய நூல்களை வெளியிட்டு சுதேச வைத்தியத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட வைத்தியர் திரு. ஐ பொன்னையா அவர்கள் காலஞ்சென்றதையிட்டு அநுதாபம் தெரிவிக்கும் பொருட்டு இருநிமிஷம் மௌனம் அநுஷ்டிக்கப்பெற்றது.

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆயுள்வேத வைத்தியக் கமிஷன் அறிக்கையில் பெரும்பான்மையான ஆலோசனைகள் மிகவும் பயன்தரக்கூடியதாக இருப்பதுடன் அவ்வறிக்கையின்படி யாழ்ப்பாணத்தில் சித்த ஆயுள்வேத வைத்திய ஆஸ்பத்திரியும் கலாசாலையும் உடனே ஸ்தாபிக்கவேண்டுமென்றும் இதனல் சுதேசவைத்தியம் தன் புராதன கீர்த்தியை மீண்டும் அடைந்து தேசமக்களின் ஆரோக்கியத்தைக் காப்பாற்ற முடியும் என வைத்தியர் G B. சுந்தானி அவர்கள் சொன்னர், மேலும் அவர் பேசுபொழுது அரசாங்கம் அந்நியர் கையில் இருக்கும்போது நசுக்கியதுபோலல்லாமல் சுதேச வைத்தியத்தின் வளர்ச்சிக்காக நமது தலைவர்கள் பாடுபடவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

வைத்தியர்களைப் பதிவு செய்யவேண்டும் என 1926ம் ஆண்டு நியமித்த கமிஷனர்கள் கூறியும் கால்நூற்றாண்டாகப் புறக்கணித்ததைக் கண்டித்ததுடன் வைத்தியர்களை உடனே பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் சுதேச வைத்திய கமிஷனர்கள் வைத்தியர்களைப் பிரித்துப் பாகுபாடு பண்ணிப் பதிவு செய்யும்படி கூறிய ஆலோசனையைக் கண்டித்ததுடன் கமிஷனர்களில் ஒருவரான திரு. G P. விக்கிர ஆராய்ச்சி அவர்களின் ஆலோசனைப்படி பாகுபாடில்லாமல் பதிவுசெய்யும்படியும் அதுவே வைத்தியர்களைச் சுதேச வைத்தியத்தின் விருத்திக்காகப் பிரிவின்றி ஒற்றுமையாக உழைக்க ஊக்கமளிக்குமென்றும் வைத்தியர் திரு, S. பரிபூரணனந்தா அவர்கள் பேசினர்.

நாட்டில் பல இடங்களிலுமுள்ள வைத்தியர்களும் மருந்துகளு மில்லாதிருக்கும் கிராம ஆங்கில வைத்தியசாலைகளை உடனே மாற்றி சுதேச வைத்தியசாலைகளாக்கி அழிந்துபோகும் நமது தேசத்தின் ஆரோக்கியத்தைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார் இவ்வசம்பந்தமான தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

---

மகாத்மா காந்தியடிகளின் தகனக் கிரியைகள் நடந்த ராஜ்கட்டத்திலே (புது டெல்கி) 90 ஏக்கர் விஸ்தீரணமுள்ள பெரிய, அழகிய தோட்டமொன்று அமைத்து அதன் மத்தியில் சித்திரவேலைப்பாடு அமைந்த ஓர் ஸ்தம்பம் எழுப்புவதென்று இந்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1942-ம் ஆண்டின் 13 ம் இலக்கக கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் சங்கானைச் சந்தையில் ப. முத்தையா அவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டததின் 26 ம் பிரிவின்படி பிரசித்தவலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விடரம்:—

| | | | |
|---|---|---|---|
| 776 | 1944 | சூன் | வ. இராமன் சங்கானை தாலி 1 |
| 1467 | 1946 | 2 | ப. ராசேசந்திரம் வட்டுக்கோட்டை கல் 1 கட்டிய மோதிரம் 1 |
| 57 | „ | 9 | இ. இராசையா சங்கானை சாதா காப்பு சோடி 1 |
| 61 | | | K. நடராசா சங்கானை கல் 9 கட்டிப மோதிரம் |

விற்பனவு 1948 ம் ஆண்டு பங்குனி மாதம் 31ந் திகதி (31-3-48)புதன்கிழமை காலை 10 மணிதொடக்கம் மேற்படி கடையிற் பிரசித்த வலத்தில் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்

வட்டுக்கோட்டை கிழக்கு
1—3—48

Mis 259 16-3 48

# பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் ஊத்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48

# கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறிபவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றாத்தல் விலை ரூபா 5-00**

வி. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம்:

**ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்**

— வல்வெட்டித்துறை —

Std 25 1-7-47—30-6-48 (செ.)

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலஙகை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | „ | 3, 000, 000, 00 |
| சேமநிதி | „ | 2, 600, 000. 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விள் ட்ரஸற் கம்பனி.
**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கினேஸ வங்கி.
**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை

**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலைப குருணுர்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.
இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு.

1. 7-8 29 1-8—30-4

# சைவபரிபாலனசபை ஆச்சிரமநிதி

## பணம் உதவியோர் விபரம்

ஸ்ரீமான்கள்:

| | ரூ | ச |
|---|---|---|
| முன் கணக்குப்படி (13-3-48) | 5194 | 50 |
| V ஆறுமுகசாமி, வண்மேற்கு | 20 | 00 |
| Dr க குருசாமி, கொட்டடி | 100 | 00 |
| Dr S இராமநாதன், யாழ்ப்பாணம் | 50 | 00 |
| A ஆசைப்பிள்ளை, ஆனைப்பந்தியடி | 25 | 00 |
| சித்திவிநாயகர் வித்தியாசாலை, புங்குடுதீவு (ஒருபகுதி) | 10 | 00 |
| இ. சுப்பிரமணியம், புங்குடுதீவு | 2 | 00 |
| வே செல்லத்தம்பி „ | 2 | 00 |
| M நாகலிங்கம் „ | 2 | 00 |
| நா அமிர்தலிங்கம், கொட்டடி (ஒருபகுதி) | 10 | 00 |
| T N இரகுநாதன், யாழ்ப்பாணம் | 10 | 00 |
| N தெய்வேந்திரம், கொழும்புத்துறை | 10 | 00 |
| வே இ அ கனகசிங்கம், போகவந்தலவ | 3 | 00 |
| பழ பெரி பெரியண்ணபிள்ளை „ | 1 | 00 |
| ம செ க கறுப்பண்ணபிள்ளை „ | 1 | 00 |
| அ ச மு மாரியப்பபிள்ளை „ | | 50 |
| R இராமசாமி „ | 1 | 00 |
| ச மு முத்துக்கண்ணு „ | | 50 |
| லெ மூக்கன் ஆசாரி „ | | 50 |
| ப சுப்பிரமணியம் „ | 1 | 00 |
| ந சின்னச்சாமி „ | 1 | 00 |
| சோ பழனி „ | 1 | 00 |
| உ. சுப்பிரமணியன் „ | 1 | 00 |
| ஆ பெருமயினர் „ | 1 | 00 |
| காடார் கம்பெனி „ | 2 | 00 |
| C சிவசுப்பிரமணியம „ | 3 | 00 |
| கி வை நல்லதம்பி „ | | 50 |
| மு பெ சண்முகம்பிள்ளை „ | | 50 |
| வீ மு மச்சன்ஸ் „ | | 50 |
| T V மரியாபிள்ளை „ | | 50 |
| P R P L பொற்வியாபிள்ளை „ | | 50 |
| V R M P அருணசலம் „ | | 50 |
| S M S சங்கரப்பிள்ளை „ | 1 | 00 |
| ச மாரிமுத்து ஆச்சாரி „ | | 50 |
| V A V S கருப்பையா „ | 1 | 50 |
| மு செல்லையா „ | 1 | 00 |
| கா. நாகராசா „ | | 50 |
| உமாகசி அ „ | | 50 |
| நா இராசையா புங்குடுதீவு | 10 | 00 |
| செ இராமேஸ்வரன் சுண்ணாகம் | 25 | 00 |
| வே விசுவலிங்கம் கேகாலை | 10 | 00 |
| க கனகராசா „ | 10 | 00 |
| சி இராசதுரை „ | 5 | 00 |
| செ சொக்கநாதன் | 3 | 00 |
| M N Mahadiva | 2 | 00 |
| P P தென்னக்கோன் | 1 | 00 |
| பெ சோ உருத்திரா | 5 | 00 |
| நா காசிப்பிள்ளை | 3 | 00 |
| M H ஜிபாது கனேத்தன்னே | 1 | 00 |
| ந சி „ | 1 | 00 |
| நண்பன் | 2 | 00 |
| S K பெருமாள் | 2 | 00 |
| P அம்பலவாணர் | 1 | 00 |
| ஆ குமாரசுவாமி | 5 | 00 |
| த கமலநாதன் | 2 | 00 |
| இராசுக்கோன் | 5 | 00 |
| K நவரத்தினராசா கொழும்பு | 2 | 00 |
| S நமசிவாயம் கேகாலை | 2 | 00 |
| V துரையப்பா „ | 5 | 00 |
| K சண்முகராசா „ | 5 | 00 |
| K தம்பையா வறக்காப்பளை | 2 | 00 |
| C குலசப்பிள்ளை கேகாலை | 2 | 00 |
| S K சங்கரப்பிள்ளை „ | 5 | 00 |
| T நவரெத்தினம் „ | 2 | 00 |
| W அப்பாபிள்ளை „ | 2 | 00 |
| A N இராமலிங்கம் „ | 1 | 00 |
| P துரைராமலிங்கம் „ | 2 | 00 |
| S ஆறுமுகம் „ | 1 | 00 |
| P B ஹேம்தகம „ | 1 | 00 |
| S A நடராசா, PWD பொல்காவெல | 2 | 00 |
| Kant an Kegaec | 1 | 00 |
| செ மகாதேவா „ | 2 | 00 |
| நா நடராசா „ | 1 | 00 |
| M R கணபதி „ | 2 | 00 |
| காந்திமதிநாதன் „ | 2 | 00 |
| | 5595 | 50 |

M 237—16-3-48 16-3-48

தி. இராசநாயகம்
தனாதிகாரி

# பேராசிரியர் கா. இளையதம்பி

அவர்கள் இயற்றிய

| | | |
|---|---|---|
| பூகோளம் | I-ம் பாகம் | 1—65 |
| பூகோளம் | II-ம் பாகம் | 1—60 |
| மூன்றாந்தரக் கணிதம் | | 75 |

இவை ஆங்கில பாடசாலைகளிலும் உபயோகிக்கத்தக்கன
எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன

E. PARANCHOTHY,
Teacher,
Vaidyeswara Vidyalayam,
Vannarponnai, Jaffna.

M 258 16,23-3-48

# வெளிவந்துவிட்டன!

திரு. வே. சிவக்கொழுந்து
அவர்களியற்றிய புதியபாடத் திட்ட

## நாலாந்தரக் கணிதம்

விலை ரூபா 1—35

## ஐந்தாந்தரக் கணிதம்

விலை ரூபா 1—75

சிறந்த விளக்கமுறைகள்! நிரம்பிய மனக்கணிதப் பயிற்சிகள்!
தெளிவான அப்பியாசங்கள் கொண்டுள்ளன
இரண்டாம், மூன்றும், ஆருந்தரக் கணிதங்களும்
மனக்கணிதங்களும் (அச்சில்)

PUBLISHERS:
**THE NORTH CEYLON BOOK DEPOT**
POINT PEDRO

Std40 27-2-48 — 26-3 48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரக்கன் விளைவிக்க

## 25,000 தொன்னுக்கு ஏற்பாடு

சென்ற வெள்ளிக்கிழமை, இலங்கையின் 9 மாகாணங்களிலுமுள்ள தலைவர்களது (அரசாங்க ஏஜெண்டு) மகாநாடு ஒன்று கொழும்பில் நிகழ்ந்தது. இலங்கையின் உணவுப் பொருள் அபிவிருத்தி சம்பந்தமாக அம் மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது. 1948-49ம் ஆண்டில் குறைந்த பட்சம் 25,000 தொன் குரக்கன் நாட்டில் விளைவிக்கப்படல் வேண்டும் என உணவுமந்திரி திரு, ரத்னாயக்கா மேற்படி மாகாணத் தலைவர்களுக்குக் கூறியதாகத் தெரிகிறது.

திரு. ரத்னாயக்கா மகாநாட்டிற் பேசும்போது பின் வருமாறு குறிப்பிட்டார்: 'குரக்கனை நன்கு அபிவிருத்தி செய்வதாலேயே, கோதுமைமா இறக்குமதியை நாம் தடுக்கமுடியும்.

"குரக்கன்மாவைக் கிராமவாசிகள் அதிகமாக உபயோகிக்கின்றனர். குரக்கனை இன்னும் அதிகமாகச் செய்கைபண்ணினால் கோதுமை மா வரத்தை இயலுமளவுக்குக் குறைக்கலாம். இப்போது அரசாங்கம் மாவின்பொருட்டு 4 கோடிரூபா செலவழிக்கிறது. மாவை உற்பத்தியாக்கும் நாடுகள் அதன்மீதுள்ள விலையை இன்னும் அதிகரிக்க எண்ணுகிறபடியால் மாவின்விலை இன்னும் அதிகமாகலாம்."

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த விவசாய மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா பேசுகையில் 66 000 ஏக்கர் நிலத்தை இந்த ஆண்டில் திருத்தி விவசாயச் செய்கைக்கு ஏற்றதாக்கத் தாம் திட்டமிட்டிருப்பதாகக் கூறினார் இன்னும் பர்மாதான் ஏற்றுமதி செய்யும் அரிசி விலையை அதிகரிக்கலாம்: ஆகவே, உள்ளூர் விவசாயிகளுக்குப் போதிய ஊக்கமளித்து அவர்களை நெல்விளைவிப்பதில் உற்சாகப்படுத்த வேண்டுமென்று கூறினர்,

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளையவர்கள் வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

நிற்று மெல்லையி னிலத்திடை யாகிப்
பொற்கெ னத்திகழ் பொருப்புடை மேவுஞ்
சிற்குணக் குரிசில் சேவடி தாழுஉச்
சொற்க நாடுள சுரேச னுரைப்பான்.

இங்ஙனம் அற்புதமடைந்து நிற்றும்போது சுவர்க்கலோக அரசனாகிய இந்திரன், பூவுலகத்தின் மத்தியில் விளங்கும் பொன்மயமான மேரு மலையில் எழுந்தருளி நிற்கும் ஞானமூர்த்தியாகிய குமாரக்கடவுளுடைய திருவடிகளை (வீழ்ந்து) வணங்கிப் பின்வருமாறு விண்ணப்பஞ் செய்யலானான் என்பது கருத்து,

பொற்கு - பொன்னின் இயல்பு; இங்கே 'கு' விகுதி பண்பையுணர்த்திற்று; 'தாழுஉ" என்பதிலுள்ள அளபெடையை இன்னிசை யளபெடையெனவும், இயற்கை யளபெடையெனவுஞ் சொல்வர். முருகக்கடவுளைப் பணிந்து பின்வருமாறு இந்திரன் விண்ணப்பஞ் செய்யலானான் என்பது இத்திருவிருத்தத்தின் தாற்பரியம். (110

ஆண்ட கைப்பகவ ஆரண மெய்ந்நூல்
பூண்ட நின்னடிகள் பூசனை யாற்ற
வேண்டு கின்றும் வினையேமது செய்ய
ஈண்டு நின்றனை யீகுதி யென்றான்.

சகல உலகங்களையும் ஆளும் தகைமையை யுடைய பெருமானே! நித்தியமாகிய வேதங்களைப் பூண்டுள்ள தேவரீருடைய திருவடிகளைப் பூசிப்பதற்கு அடியேம் ஆசைப்படுகின்றேம்: இப்பொழுது அங்ஙனஞ் செய்தற்கு அருள்புரிக என (இந்திரன்) விண்ணப்பஞ் செய்தான் என்பது கருத்து.

ஆண்டகை - ஆளுந்தன்மையையுடைய இறைவன்; "ஆரணமெய்ந்நூல் பூண்ட.....அடிகள்" என்பதற்கு வேதங்களைப் பாதாட்டை, பரிபுரமென்னும ஆணிகளாகப் பூண்ட திருவடிகளெனவும், வேதங்கள் அதிதேவதைகளாகி அக்காலத்திற் பூசித்த திருவடிகளெனவும் பொருள்கொள்ளல் பொருந்துமென்க. (111)

கதைத்தொடர்: என்று இவ்வாறு இந்திரன் வேண்ட, குகப்பெருமான் அவனுடைய வேண்டுகோளுக்கு இசைந்து அம்மேருமலையை விட்டகன்று திருக்கைலாயகிரியின் சாரலிலுள்ள ஒரு மலையை யடைகின்றார்; அப்பொழுது இந்திரன் முதலிய தேவர்கள் மகிழ்ச்சியோடு முருகவேளின் பின்னே சென்று அம்மலையை அடைகின்றார்கள்; அம்மலையின்கண்ணே சண்முக மூர்த்தி எழுந்தருளியிருப்ப, இந்திரன் முதலிய தேவர்கள் தேவகம்மியனாகிய விச்சுவகன்மனைக்கொண்டு ஒருகோயில் அமைப்பித்து ஆசனமிட்டு அந்த ஆசனத்தில் முருகமூர்த்தியை இருந்தருளச்செய்து பூசிக்கின்றார்கள்; பெருமான் எழுந்தருளியிருப்ப இந்திரன முதலாம் இமையவர் தங்கள் படைத்துணையென்றும் முருகவேள் சேனாபதி யென்றுஞ் சொல்லிப் பெருமானுக்கு அபிடேகஞ் செய்கின்றார்கள். அபிடேகம் முடிந்தது அர்ச்சனை செய்யும்போது தேவர்கள்:-

ஐவ கைப்படும் ஆவியும் பாளித
மெய்வி ளக்கமும் வேறுள பான்மையும்
எவ்வெ வர்க்கு மிறைவற்கு நல்கியே
செவ்வி தர்ச்சனை செய்தன ரென்பவே.

எவரெவர்க்கும் (எல்லார்க்கும்) மேலான முருகக்கடவுளுக்கு, ஐந்து வகையான தீபங்களையும் கருப்பூரதீபத்தையும் சோடசஉபசாரங்களுள் ஏனையவற்றையும் வழங்கிச் செவ்வனே பூசை செய்தார்கள் என்பது கருத்து.

ஐவகைத்தூபம் - சந்தனம், அகில், பச்சைக்கருப்பூரம், குந்துருக்கம், குங்குலியம என்னுமிவைகளைக்கொண்டு இடும் தூபம். எவ்வெவர்க்கு மிறைவன் - எல்லாத் தேவர்கட்குந் தலைவன்; செவ்விது - ஆகமவிதிதவறுமல்; என்ப, ஏ, அசை. (112)


# விளம்பரம்

## என். எஸ். தாசன் கொம்பனி
(2-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்)

சிசப்புக் கை மார்க் இங்கிலீஷ் சீமேந்து லண்டன் 112 றுத்தல் பாக்கெட்டுகளில் மேற்படி கொம்பனியில் கிடைக்கும்.

**மொத்தத்திற்கு ரூ. 8-50. சில்லறைக்கு ரூ. 8-75.**

Srd 43 12-3-48—9-4-48.


பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சபையில் நியமன அங்கத்தவரும், பிரபல நியாயவாதியுமான திரு. ஏ. எப் எல். கிரேஷியன். இலங்கை உயர்தர நீதிமன்றத்து நீதிபதியாக நியமிக்கப்படலாம் என்று ஓர் செய்தி கூறுகிறது

சாவகச்சேரி இப்போது ஓர் கிராமச் சங்கத்தால் பரிபாலிக்கப்படுகிறது. 1949 ம் ஆண்டுதொடக்கம் கிராமச்சங்கத்துக்குப் பதிலாக அங்கே ஓர் பட்டின சங்கத்தைத் தாபிக்க அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.


யாழ்ப்பாணம், சைவபரிபாலன சபையார்

# வெளியிட்ட சமய நூல்கள்

விலை: ரூ. ச.

சைவத்திருநெறித் தோத்திரத்திரட்டு — 75

இதன்கண் அகத்தியர் தேவாரத்திரட்டு முழுவதும் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, எல்லா மூர்த்திகளுக்குமாய திருப்புராணம் பட்டினத்தடிகள் பாடல், திருப்புகழ் கந்தரலங்காரம், திருமுருகாற்றுப்படை வெண்பாக்கள், தாயுமானவர்பாடல் முதலியனதொகுக்கப்பட்டுள்ளன; இவற்றோடு S. S. C. பரீட்சைகள், சமய பாடத்திற்கென விதிக்கப்பட்ட தேவார திருவாசகப் பதிகங்கள் நவமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இங்குள்ள சைவ ஆங்கில தமிழ்க் கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் சமய பாடமாக விதிக்கப்பட்டுள்ளது. சைவ நன்மக்கள் எவரிடத்தும் ஒருபிரதி ஆவசியகம் இருத்தல் வேண்டும்.

சைவபோதம் முதற் புத்தகம் (வசன பாடங்கள்) — 50
,, இரண்டாம் புத்தகம் ,, (அச்சில்) — 60
,, மூன்றாம்புத்தகம் (திருவருட்பயன்) உரையுடன்... 75

[இச் சைவபோதம் மூன்றனுள் முதற் புத்தகமும் இரண்டாம் புத்தகமும் ஆசிரியர் ஸ்ரீ சு சிவபாதசுந்தரமவர்களாற் சைவ சமயத்தை அறிய விரும்புவோர்க்கு ஆரம்ப பாடங்களாக, பல மேற்கோள்களுடன் இலகுவான வசன நடையில் எழுதப்பெற்றுள்ளனமூன்றாம் புத்த சித்தாந்த சாத்திரம் பதினான்கனு ளொன்றாகிய திருவருட் பயனுக்கு, மேற்படி ஆசிரியர் இலகுவான நடையில் எழுதியசிறந்த உரையாகும். இம்மூன்று போதங்களும் சைவக் கலாசாலைகளிற் சிறுவர்க்குச் சமய பாடமாக ஊட்டப்படுவன.

திருக்குறள் .... .... 1 25

(முதல் 30 அதிகாரம் அறத்துப்பால் முழுவதும்) பதவுரை, கருத்துரை விசேடவுரை ஆங்கில மொழிபெயர்ப்பு நூலாசிரியர் வரலாறு என்னு மிவைகளுடன் கூடியது.

சைவக்கிரியை விளக்கம் — 50

சைவமக்கள் செய்யும் சில கிரியைகளின் உட்பொருளை விளக்கி, ஸ்ரீ சு சிவபாதசுந்தரமவர்களால் எழுதப்பட்டது.

நமச்சிவாயமாலை உரையுடன் (அச்சில்) — 10
சோமவார விரத மான்மியம் — 18
கந்த விரத மான்மியம் — 12
சிவபூசைத் திரட்டு — 18

சைவசமய சீலர்கள், தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாக்களைக் கொண்டே தங்கள் ஆன்மார்த்தபூசையைக் கிரமமாகச் செய்யும்வண்ணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களால் தொகுக்கப்பெற்றுள்ளது.

மயூரகிரிப் புராணம் 1 50

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளையவர்கள் எழுதிய பொழிப்புரையுடன், பண்டிதர் ம வே.திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய விசேடவுரை. உரையாசிரியர் வரலாறு என்னு மிவற்றோடும் வித்துவ சிரோமணி யவர்களின் நாதிமைப் படத்தோடும் கூடியது.

திருக்குறள் 10 (26—34) அதிகாரங்கள் — 75

இவை S S. C. பரீட்சைக்குச் சமய பாடமாகவுள்ளது.

சமய குரவர், சந்தான குரவர் சரித்திரச் சுருக்கம் 75



# ஆசிரியகலாசாலைப் பிரவேசவகுப்பு

ஷை வகுப்பு ஒன்று இம்மாதம் 22-ம் திகதி வெள்ளிக்கிழமை (5-3-48) தொடக்கம் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் நடைபெறும். ஆண், பெண் இருபாலாரும் சேர்ந்து படிக்கலாம். சைவாசிரிய கலாசாலைப் பேராசிரிய களும் திறமைமிக்க வேறுபல ஆசிரியர்களும் படிப்பிப்பார்கள்.

வகுப்பிற் சேர விரும்புகிறவர்கள் மாதம் (10) பத்து ரூபா வீதம் இரண்டு மாதங்களுக்கு இருபது ரூபா வேதனம் முற்பணமாகக் கொடுக்கவேண்டும். விடுதியில் தங்க விரும்புகிறவர்களுக்கு விடுதிச்செலவு மாதம் 25/ ரூபா

Mis 259 9, 16—3—48.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சி ரேடியோ

செவ்வாய் மார்ச் 16

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில்செய்திகள் 7 30 கே ஆர் வி ராமசாஸ்திரி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 பி எஸ் ராஜா ஐயங்கார் இசைத்தட்டு 8 30 வி நடராசன் கிளாரினெட் 9 முடிவு

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கே ஆர் வி ராமநாதசாஸ்திரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 வி நடராசன் கிளாரினெட் 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 டி ஆர் நவனீதம் புல்லாங்குழல் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 தாளவாத்யக் கச்சேரி 7 20 தமிழில் செய்திகள் 7 45 ஆலத்தூர் சகோதரர்கள் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 வீணை வயலின் 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 _0 முடிவு

புதன் மார்ச் 17

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 வி பி வேதவியாசராவ் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 ரேடியோ வாத்யகோஷ்டி 8 30 கொட்டையூர் ஆர் தங்கவேலு பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 வி பி வேதவியாசராவ் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 வி பி வேதவியாசராவ் பாட்டு 2 30 நீங்கள் கேட்டவை 3 முடிவு

மாலை 5 கமலா நாகநாதன் வயலின் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சகோதரி நாடகம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 மாகாண அபிவிருத்திப் பேச்சு 8 கமலா நாகநாதன் வயலின் 8 30 கொட்டையூர் ஆர் தங்கவேலு பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 வாத்ய இசை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 அபூர்வ ராகங்கள் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

வியாழன் மார்ச் 18

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி பாலம்மாள் வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 வி ராமமூர்த்தி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 தாலாட்டுப் பாட்டுக்கள் 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 டி பாலம்மாள் வீணை 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 இருதாலிசை இசைத்தட்டு 7 15 ராணுவத்திலிருந்து திரும்பியவர்களுக்கு உத்தியோக வசதிகள் 7 30 தமிழில் செய்திகள் 7 45 வி என் கிருஷ்ணையர் பாட்டு 8 15 டி கே ரங்கசாமி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 பாபநாசசிவம் பாடல்கள் இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 வீ எஸ் கிருஷ்ணையா பாட்டு 10 30 முடிவு.

வெள்ளி மார்ச் 19

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 எ கேசவசாமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 எஸ் கிட்டம்மாள் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எ கேசவசாமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ் கிட்டம்மாள் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 உமையாள்புரம் ஜி கல்யாணராம ஐயர் பாட்டு 5 40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 உமையாள்புரம் ஜீ கல்யாணராம ஐயர் பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 திருவிடைமருதூர் பி எஸ் வீருசாமிபிள்ளை நாதஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 நாட்டுப்பாடல்கள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 குரல் வகை இசைத்தட்டு 10 [illegible] இசைத்தட்டு 10 [illegible]

## சிவராத்திரி

முதலாம் பக்கத் தொடர்ச்சி

அதனை அமைப்பவர்கள் எய்தும் புண்ணியத்தைப்பற்றியும் தெளிவாகக் கூறினார்கள். பின் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக் காரியதரிசி திரு மு. மயில்வாகனம் அவர்கள் சிவராத்திரியின் மகிமையைப்பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார். சிவராத்திரி சிவவிரதங்களுக்குள் சிறந்ததெனவும், சிவராத்திரியின் வரலாற்றைக் காஞ்சிப்புராணத்திலும் கந்தபுராணத்திலும், சுன்னாகம் வரதராஜப்புலவர் இயற்றிய சிவராத்திரிப் புராணத்திலும் இருந்து மேற்கோள் காட்டி விளக்கினார்கள். திரு. கா. கந்தசுவாமி வைத்தியரவர்கள் மெய்ப்பொருள்நாயனார் என்னும் பொருள் பற்றி பக்கவாத்திய சகிதமாக ஓர் சிறந்த கதாப்பிரசங்கம் நிகழ்த்தினார். திரு. சி. கணபதிப்பிள்ளை வைத்தியரவர்கள் 'சைவாசாரம்'என்னும்பொருள்பற்றியும், திரு சி.சரவணமுத்து 'தொண்டின் பெருமை' என்னும் பொருள்பற்றியும் உபந்நியாசங்கள் செய்தார்கள். திருப்புகழ் திரு. வ. சுப்பிரமணியம் திருப்புகழ்ப்பாராயணம் பக்தியுடன் செய்தார்கள். தலைவரவர்கள் பின் நடராஜர் தத்துவம் என்னும் பொருள்பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்தார். சரவணை திரு. வே சோமசுந்தரம் வைத்தியர் அவர்கள் குறிப்புரை கூறினார்கள். மறுநாட் காலை சூரியோதயத்துக்கு முன்பாக குறித்த மடாலயத்தைக் கட்டி முடித்த திரு. க செல்லப்பா அவர்களும் பிற சிவனடியார்களும் கங்காதீர்த்தம் பூரணகும்பம் முதலியன தாங்கிச் சிவபுராணம்ஓதிகொண்டு தேவி ஆலயத்தை பிரதக்ஷிணஞ் செய்துகொண்டு திரு. செல்லப்பா அவர்களால் கட்டப்பெற்ற திருக்குளத்தை யடைந்து கங்கா தீர்த்தத்தையும் கும்பதீர்த்தத்தையும் ஷெ குளத்தில் செறித்து அதனைப் புனிதமாக்கினார்கள். பின்பு பல அடியார்கள் குளத்தில் தீர்த்தமாடினார்கள், மேலே சொல்லப்பட்ட தொண்டுகளை அன்னலங்கருதாது புரிந்துவரும் திரு க. செல்லப்பா அவர்களின் ஈசுரபக்தியும் ஊக்கமும் பாராட்டற்பாலன.

—கடித.

## திருக்கஞ்சனூர்த் தலம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

[வின்
மாறுட மடங்கலை வலிதபக் கோறலின்
மாயோன் மட்டூ வாகிய காலைத்
தடமுலைதிளைத்துச் சாத்தனைத் தருதலின்
ஆழ்கடல் வரைப்பி னுக்ரோ ரனேகர்
அன்புமீ தூர வருச்சனை யாற்றலின்
நான்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலின்
ஐயிரு பிறப்பினு மரியுருச் சித்தலின்
இருவாத மன்னமு மேனமு மாகி
யடிமுடி தேட அழர்பிழம் பாகலின்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த கபால் வரைபிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறப்பழி முதுந்தப் புத்தேள்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலின்
அயன்சிர மாலை யவ்வில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலின்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுள்
உம்பர்களவர்க்கு மூபர்ந்தோன்
என்பது தெளிக இயல்புணர்ந் தோரே."

திருக்கஞ்சனூர்த் தலத்திற்குரியதாகிய அப்பர் சுவாமிகள் தேவாரம், தருமபுர ஆதீனத்து மகாசந்நிதானமவர்களால், இவ்வரலாற்றோடும் பதிகப் பொருள் விளக்கத்தோடும், மேற்படி ஆதீன 154-ம் வெளியீடாக இப்பொழுது வெளியிடப் பெற்றுள்ளது


# உலகம் பலவிதக் கதை !

## கோபால —— நேசரத்தினம்

இந்துசாதனப் பத்திராசிரியர்
ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதியது
படிப்போர்க்கு நல்லறிவைப் புகட்டுவது வாசிக்கத் தெவிட்டாதது

பிரதிகள் எம்மிடத்திலும், யாழ்ப்பாணம் முதலிய பட்டினங்களிலுள்ள பிரபல புத்தகசாலைகளிலும், கொழும்பு, 28 Upper Chatham Street ஸ்ரீ சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெறற்பாலன.

விலை (1—25) ஒன்றேகால் ரூபா

Apply To Pandit V. T. Sambandhan
Vannarpannai, Jaffna.

Std 41 27-¨-8 — 27.4.48

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிந்து சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Std 14 20-11-46—20-11-48 (தி)

# நாதன்ஸ் பிரசாரம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய
பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது
யாழ்ப்பாணம் - சென்னை - பினாங் ரூபா 170
" நாகபட்டணம் 115
யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு
அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம்
கப்பலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

**எஸ். ஆர். எஸ். நாதன்**

21/3, ஸ்ரான்லி ரோட் :: யாழ்ப்பாணம்
எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம்,
சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு
Std 22. 6-6-47—6-6-48


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்,

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarpannai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarpannai, Jaffna, on Tuesday March 16, 1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org